மாலை முரசு
பக்கங்கள் 16+3
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 13 சனிக்கிழமை 28.12.2024 | அதிர்வு 149

## மாத்துளையில் கார் மோதி பெண் பாதசாரி மரணம்!

மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி – யாழ்ப்பாணம் வீதியில் பலாபத்வல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பெண் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்



# தமிழரசின் பதில் தலைவராக சி.வி.கே. ஏகமனதாகத் தெரிவு

## அரசியல் குழுத் தலைவராக மாவை நீடிப்பார்



(கி.வசந்தன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவராகவும் பெரும் தலைவராகவும் மாவை சேனாதிராஜா இருப்பார். இடைக்காலப் பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானம் செயற்படுவார். தமிழரசுக் கட்சியின் மத்திய குழு ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.”

05



# தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில் நடந்தது என்ன?

## முன்னாள் எம்.பி. சுமந்திரன் விளக்கம்

(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவராக தொடர்ந்தும் மாவை சேனாதிராஜா செயற்படுவார் எனவும், கட்சியின் பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானம் செயற்படுவார் எனவும் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றது.

05





# வவுனியாவில் 50 இற்கும் மேற்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் உட்பட இருவர் துப்பாக்கியுடன் கைது!

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் 50 இற்கும் மேற்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் உட்பட இருவரை உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்படும் எனச் சந்தேகிக்கப்படும் இரு இயந்திரங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா நகர், பூவரசங்குளம், நெடுங்கேணி, ஓமந்தை, கனகராயன் குளம் என வவுனியா மாவட்டத்தின் பல பொலிஸ் பிரிவுகளிலும், ஏனைய மாவட்டங்களிலும் கத்தி முனைகளில் வீடுகளில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டமை என 50 இற்கும் மேற்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் தொடர்பில் வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமந்த விஜசேகரவின் ஆலோசனையில், வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மலன் பெரேராவின் வழிநடத்தலில் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சாரங்க ராஜகுரு, பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திஸாநாயக்க, ரன்வெல, பொலிஸ் கொன்தாபிள்களான சிந்தக, விதுசன், சாரதியான திஸாநாயக்க ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பிரதான நபர் வீட்டில் தங்குவது இல்லை என்பதுடன் வனப்பகுதிகளிலேயே தங்குவதை வழமையாக கொண்டிருந்தார். இந்நிலையிலேயே வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் கீழ் 43 வயதுடைய மேற்படி நபரை உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்படும் எனச் சந்தேகிக்கப்படும் இரு இயந்திரங்களுடன் கைது செய்துள்ளதுடன், அவருக்கு உதவியாகச் செயற்பட்டார் எனச் சந்தேகிக்கப்படும் 30 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பிரதான நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் நான்கு திறந்த பிடியாணை மற்றும் ஆறு திகதியிடப்பட்ட பிடியாணை என்பன இருப்பதுடன் அவர்களிடம் முன்னெடுக்கப்படுகின்ற மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட இருவரையும் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கையில் கடந்த மூன்று மாதங்களில் 28 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவு!

இலங்கையில் கடந்த மூன்று மாதங்களில் 28 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ள நிலையில் அவற்றில் 16 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் நடத்தப்பட்டவை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 10 சம்பவங்கள் குறித்து 57 சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளதோடு மூன்று துப்பாக்கிகளை மீட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பாதாள உலகக் குழுக்கள் ஒன்றுக்கொன்று அடிக்கடி மோதிக்கொள்கின்றன. அந்த மோதல்களின் தொடர்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களை ஒப்பிடும்போது, 2024இல் சிறியளவில் குறைவு காணப்படுகின்றது.

2023ஆம் ஆண்டில் 120 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதோடு அவற்றில் 65 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களால் நடத்தப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டில், அந்த எண்ணிக்கை 99ஆக உள்ளது, இந்தச் சம்பவங்களில் 55 குற்றக் கும்பல்கள் ஈடுபட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் வன்முறை குற்றச் செயல்களில் அதிகரிப்பு இருப்பதாக மக்கள் பேசுகின்றார்கள். அதற்குக் காரணம் குற்றங்கள் சம்பந்தமாக ஊடகங்களில் அதிகளவான செய்திகள் காணப்படுகின்றன. இருப்பினும், அந்தக் குற்றங்கள் அண்மைய காலத்தில் தீவிரமடைந்துள்ளது என்பதை நாம் ஒப்புக்கொள்கின்றோம்.

2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தங்காலையில் ஐந்து பேர் கொல்லப்பட்டதையும், சில நாட்களுக்குப் பிறகு மல்வதுஹிரிபிட்டியவில் ஒரு பௌத்த தேரர் கொல்லப்பட்டதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஆயுதமேந்திய கும்பல்களுக்கு இடையே ஏராளமான வன்முறைகள் உள்ளன. ஏனெனில் அவர்கள் போதைப் பொருள் வியாபாரத்தில் அதிக பங்குகளுக்காகவும் தங்களது பகுதிகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஒருவருக்கொருவர் போட்டியிடுகின்றார்கள்.

பொலிஸார் அல்லது பாதுகாப்புப் படையினர் பெரிய அளவிலான சோதனைகளை மேற்கொள்ளும் போதெல்லாம், ஒரு போட்டிக் குழுவின் துப்பு அடிப்படையில் நாங்கள் செயற்படுகின்றோம் என்று குற்றவியல் குழுக்கள் நினைக்கிறார்கள்.

போட்டி கும்பல்களின் துப்பு காரணமாகவே போதைப்பொருட்கள் கண்டறியப்பட்டதாக குற்றவியல் குழுக்கள் நம்புகின்றன. எவ்வாறாயினும் சமீபத்திய வாரங்களில் நாங்கள் நிறைய போதைப் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளோம்.

இதேநேரம், பிணையில் விடுவிக்கப்பட்டதன் பின்னர் பிணை நிபந்தனைகளை தவிர்த்து விட்டு தப்பியோடி 188 பேர் மீது இன்டர்போல் சிவப்பு அறிவிப்புகளைப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களில் 63 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.” – என்றார்.

## நீதிமன்ற வழக்குகளை மீளப்பெறு | பொதுச் சபையை உடனடியாகக் கூட்டு

## யாப்பின்படி தலைவர் உட்பட யாரையும் வெளியேற்றும் அதிகாரம் மத்திய குழுவுக்கு இல்லை என்பதை ஏற்றுக்கொள்

## 2019 இல் பொதுச் சபையால் நியமிக்கப்பட்ட தேர்தல் நியமனக் குழுவை இயங்கவிடு

# தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே!

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்ட வாயிலில் காட்சியளித்த பதாதை







**(கி.வசந்தன்)**

“மத்திய குழுவின் பலவீனமான தீர்மானங்களால் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே!” உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுடன் கூடிய பதாதை ஒன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற்ற மண்டபத்துக்கு முன்னால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

குறித்த பதாதைக்குத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்கள், மற்றும் தொண்டர்கள் உரிமை கோரியிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவிருந்த நிலையிலேயே இந்தப் பதாதை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதன்போது மத்திய குழுக் கூட்டத்துக்கு வருகை தந்தவர்கள் அந்தப் பதாதையைப் பார்வையிட்ட பின்னர் கூட்ட மண்டபத்துக்குள் சென்றிருந்தனர்.

குறித்த பதாகையில், “நீதிமன்ற வழக்குகளை மீளப்பெறு, பொதுச் சபையை உடனடியாகக் கூட்டு, யாப்பின்படி தலைவர் உட்பட யாரையும் வெளியேற்றும் அதிகாரம் மத்திய குழுவுக்கு இல்லை என்பதை ஏற்றுக்கொள், 2019 இல் பொதுச் சபையால் நியமிக்கப்பட்ட தேர்தல் நியமனக் குழுவை இயங்கவிடு, மத்திய குழுவின் பலவீனமான தீர்மானங்களால் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் பணிகளைச் செய்யாதே!” – போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.











# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் இன்று கையெழுத்துப் போராட்டம்

(கி.வசந்தன்)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் இன்று நடைபெற்றது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா தபால் நிலையம் முன்பாக இந்தக் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும், விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கம் செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளையும் புதிய அரசு விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதில் இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் மதத்தலைவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர்.





# இராணுவம் காடுகளில் முகாம் அமைக்கலாம்; ஆனால் மேய்ச்சல் தரைக்கு அனுமதி இல்லை

(கி.வசந்தன்)

"வவுனியாவில் பெரும் காடுகளில் ஏக்கர் கணக்கான காணிகளில் இராணுவ முகாம் அமைத்துள்ளது. ஆனால், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை அமைப்பதில் மாத்திரம் திணைக்களங்கள் அக்கறையில்லாமல் செயற்படுகின்றன." – என்று வவுனியா ஒருங்கிணைப்புக் குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

## மக்கள் கடும் விசனம்

இதன்போது, வவுனியாவில் மேய்ச்சல் தரை இல்லாமல் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாகக் கவலை தெரிவித்தனர். மழைக் காலங்களில் அதன் நிலைமை மேலும் மோசமடைவதுடன் பால் உற்பத்தியும் வீழ்ச்சியடையும் நிலை காணப்படுகின்றது.

இராணுவம் பெரும் காடுகளில் பல ஏக்கர் கணக்கான காணிகளைப் பிடித்து முகாம் அமைத்துள்ளது. ஆனால், நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிக்கும் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை வழங்குவதில் அதிகாரிகள் பின்னடிப்பதாகப் பொதுமக்கள் குற்றம் சுமத்தினர்.

குளத்தின் அலைகரைப் பகுதிகளில் மேய்ச்சல் தரை அமைப்பது தொடர்பாக ஆராயுமாறும், அரச காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கும் நபர்களிடம் இருந்து அந்தக் காணிகளைப் பறித்து மேய்ச்சல் தரை அமைப்பது தொடர்பாகப் பரிசீலிக்க முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் இதன்போது தெரிவித்திருந்தார்.





## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழரசின் பதில்...

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சின் பேச்சாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மத்திய குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் பல விடயங்கள் இருந்தாலும் கூட முதலாவதாக தலைவர் விடயம் குறித்து பேசப்பட்டது. இதன்போது அடுத்த மாநாடு கூடுகின்ற வரைக்கும் இருக்கின்ற இடைக்காலத்தில் பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானம் பணியாற்றுவார் எனவும், மாவை சேனாதிராஜா அரசியல் குழுத் தலைவராகச் செயற்பாடுவார் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாது மாவை சேனாதிராஜா ஒரு பெரும் தலைவராகவும் இருப்பார் என்றும் சொல்லப்பட்டது.

அரசியல் யாப்புக்களுக்கு அப்பாற்பட்ட பதவிகளில் இருப்பது அர்த்தமில்லை எனவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது." – என்றார்.

### தமிழரசின் மத்திய...

நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் இராஜிநாமா சம்பந்தமாக வாக்கெடுப்பு நடத்துவது என்று போடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பல வாதப்பிரதிவாதங்கள் இருந்த போதிலும் 18 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஓர் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் நன்மை கருதி தனது பெயருக்குக் களங்கம் ஏற்படாத வகையில் தன்னுடைய இராஜிநாமாவை உறுப்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. மேலும் சிலரும் அந்தக் கருத்துக்களை ஏற்றிருந்தார்கள். அதற்கு எதிரான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

இறுதியில் கட்சியின் மத்திய குழு ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளது. மாவை சேனாதிராஜா தொடர்ந்தும் கட்சியின் அரசியல் குழுத் தலைவராகச் செயற்படுவார். தலைவர் பதவி எஞ்சிய காலத்துக்குப் பதில் தலைவராக கட்சியின் சிரேஷ்ட உப தலைவராகச் செயற்படும் சி.வி.கே.சிவஞானம் செயற்படுவார். பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் வாக்கெடுப்பு இன்றி ஏகமனதாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பிரிவினை இல்லாது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் குழு என்பது குழுவாக எடுக்கப்படும் தீர்மானங்களை மையப்படுத்தி, மத்திய செயற்குழு சந்திக்க முடியாத தருணங்களில் அரசியல் குழு கூடுவது வழக்கமாக இருக்கின்றது. பல முக்கிய விடயங்களை அரசியல் குழுவே எடுத்திருக்கின்றது.

எனவே, முன்னைய காலத்தில் மாவை சேனாதிராஜா கட்சித்தலைமை பொறுப்பை எடுத்தபோது சம்பந்தனை அரசியல் குழுவின் தலைவராக நியமித்திருந்தோம். அதனடிப்படையிலேதான் இப்போது மாவை சேனாதிராஜா அந்த பதவியை வகிப்பார் என்ற தீர்மானம் எடுத்துள்ளோம்.

இதேவேளை, கட்சி தொடர்பாக யாழ்ப்பாணத்தில் தொடரப்பட்ட வழக்கில் இது வரை கட்டளைகள் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே, அது குறித்து கருத்துத் தெரிவிப்பதற்கு எதுவும் இல்லை." – என்றார்.

### மாத்தளையில்...

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மாத்தளையிலிருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த கார் ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட பெண் பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பெண் பாதசாரி மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை, பலாபத்வல பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கார் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்பு சி.வி.கேயிடம்!

இலங்கையில் தமிழர்கள் தரப்பில் பிரதான அரசியல் கட்சியாக விளங்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் உத்வேகமாக இயங்கக்கூடிய சூழல் கிட்டியிருக்கின்றது.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேல் கட்சியின் தலைமைப் பதவியைக் கட்டிப்பிடித்து வைத்துக்கொண்டு, கட்சியை முழு மூச்சாக - மக்கள் செல்வாக்கோடு - முன் கொண்டு செல்ல முடியாமல் தடுமாறி நின்ற மாவை சேனாதிராஜாவை, அந்த கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து மெல்ல விடுவித்து, கட்சியைப் புதிய திசையில் - பாதையில் - கொண்டு நடத்துவதற்கான முடிவை கட்சியின் மத்திய குழு இன்று ஏகமனதாக எடுத்திருக்கின்றது.

பொதுத்தேர்தல் சமயத்தில் மாவை சேனாதிராஜா முன்னெடுத்த ராஜினாமா நாடகத்தை வசமாகப் பற்றிக் கொண்டு, அவரை அந்தப் பதவியில் இருந்து விடுவித்து, கட்சியின் பதில் தலைவராக இதுவரை சிரேஷ்ட உப தலைவராக இருந்து வரும் சி.வி.கே.சிவஞானத்தை நியமிக்கும் தீர்மானத்தை கட்சியின் மத்திய குழு இன்று எடுத்திருக்கின்றது.

ஆயினும், மேற்படி ராஜினாமாக் கடிதத்தில் தான் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவி தவிர்ந்த ஏனைய பதவிகளில் இருந்து விலகுகிறார் என்று மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்த போதிலும், அவருக்கு ஆறுதல் பரிசாக கட்சியின் அரசியல் குழுத் தலைவர் பதவியை மத்திய குழு வழங்கியிருக்கின்றது.

2014 ஆம் ஆண்டு வரை கட்சித் தலைவராக இருந்த சம்பந்தன், அப்பொறுப்பை வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டில் வைத்து மாவை சேனாதிராஜாவிடம் ஒப்படைத்தமையை அடுத்து, அன்று முதல் இறக்கும் வரை கட்சியின் அரசியல்குழுத்தலைவர்பதவி சம்பந்தனுக்கு வழங்கப்பட்டிருந்தது. இத்தகைய கௌரவத்தை இப்போது கட்சித் தலைவர்பதவியிலிருந்து 'இறக்கப்பட்ட' மாவை சேனாதிராஜாவுக்கு கட்சி வழங்கி இருக்கின்றது. அதை கட்சியின் 'பெருந்தலைவர் பதவி' தனக்கு வழங்கப்பட்டதாகக் கருதி மாவை சேனாதிராஜா மகிழ்ந்து கொள்ளலாம்.

தமிழரசுக் கட்சியின் அடுத்த தேசிய மாநாடு நடைபெறும் வரை, கட்சியை வழிநடத்தும் பொறுப்பு பதில் தலைவர் நியமனத்தை பெற்றிருக்கும் சி.வி.கே.சிவஞானத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

உட்கட்சி மோதலால் வழக்குக்குள் சிக்கி இருக்கும் கட்சியை மீட்டெடுத்து, தேசிய மாநாட்டை முறைப்படி விரைந்து நடத்தி, கட்சியை முற்கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு சிவஞானத்தின் தோள்களின் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது.

மாவை சேனாதிராஜாவின் தலைமையினால் கட்சிக்கு ஏற்பட்ட தளர்விலிருந்து கட்சியை மீட்டெடுத்து மீண்டும் உத்வேகமாக அதனை இயங்க வைக்கும் கடப்பாடு சிவஞானத்துக்கு உண்டு.

கட்சிக்குள் பல அணிகள், பல கன்னைகள் என்று கட்சியை சிதறடித்து, பல வீனமாக்கி பதவியிலிருந்து விலகி இருக்கின்றார் மாவை சேனாதிராஜா. அந்த பின்னடைவுகளில் இருந்து கட்சியை ஜனநாயக ரீதியில் மீட்டெடுப்பது என்பது பெரிய சிக்கலான - சவாலான - பணியாகும்.

கட்சியின் முரண்பட்ட தரப்புகளை ஒன்றிணைப்பது என்பது இன்றைய நிலையில் இமாலயப் பணியாக இருக்கப் போகின்றது.

போதாக்குறைக்கு கட்சியின் சமரச ஏற்பாடாக கட்சி அரசியல் குழுவின் தலைவராக மாவை சேனாதிராஜாவை மத்திய குழு இன்று நியமித்திருக்கின்றது.

அந்தச் சூழ்நிலையில் அரசியல் குழுவின் தலைவராக இருந்து கொண்டு மாவை தரப்பு திரும்பவும் பண்ணக் கூடிய குழப்பங்கள் - குசும்புகளை - சமாளித்து, கட்சியை வழிநடத்துவது என்பது சி.வி.கே.சிவஞானத்துக்கு தலையிடி தரும் பணியாகத்தான் இருக்கும்.



# தலைவர் தலைவராகவே இருப்பார்; ஆவேசம் வெளியிட்டார் சிவமோகன்!

(கி.வசந்தன்)

தலைவரை நீக்கும் அதிகாரம் மத்திய குழுவில் இல்லை. தலைவர் தலைவராக இருப்பார் என்று தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இருந்து இடைநடுவில் வெளிநடப்பு செய்த சிவமோகன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

எப்போதும் எமது கட்சி தீர்மானங்களை எடுக்கும்போது அனைவரையும் சாப்பாட்டுக்கு செல்லுமாறு தெரிவித்து விட்டு எடுப்பது வழமை. இன்றும் அதே நிலைமை தான் இடம்பெற்றது.

இவ்வாறு தான் தேர்தல் நியமனக் குழுவுக்கும் இடம் பெற்றிருந்தது.

தற்போதைய செயலாளர் இருக்கும்போதுதான் இந்தக் கட்சியில் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.



தலைவரை நீக்கும் அதிகாரம் இந்த மத்திய குழுவில் எவருக்குமே இல்லை. அதனை நான் நேரடியாக மத்திய குழுவுக்குத் தெரிவித்து விட்டு கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்திருக்கிறேன். என்னுடைய நோக்கம் இந்த கட்சியை சீராக்குவதுதான்.

வழக்குகளை பின்வாங்குவதாக சுமந்திரன் வாக்குறுதி வழங்கி இருக்கின்றார். அவரால் சாட்டப்பட்டவர்கள் தான் இந்த வழக்குகளை போட்டார்கள் என்பதற்கு இது ஒரு சாட்சி. ஆகவே அவரும் அந்த வழக்குகளை பின்வாங்கினால் நானும் எனது வழக்குகளை பின்வாங்கி பொதுச் சபை கூட்டத்துக்குச் செல்வதற்குத் தயாராகத் தான் இருக்கிறேன்.

தலைவரை தலைவர் பதவியில் இருந்து நீக்கவே முடியாது. நாங்கள் கேட்டுக் கொண்டது, தலைவர் தலைவராகவே இருக்க பதில் தலைவர் கூட்டங்களை நடத்த வேண்டும் என்பதுதான். ஆனால் அவர்கள் மாறுபட்ட செய்தியை வெளியிடுகிறார்கள். அது அவர்கள் வெளியிட்டது செய்தி அல்ல. தலைவர் தலைவராகவே இருப்பார்.– என்றார்.







# பொத்துவில் மக்களைச் சந்தித்த தாஹிர் எம்.பி.!

(அபு அலா )

கடந்த பொதுத்தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் தனக்கும் வாக்களித்த மக்களுக்கு நன்றியை தெரிவித்து அந்த மக்களின் தேவைகளை நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கேட்டறிந்து கொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொத்துவில் மத்திய குழுவின் தலைவரும் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாலர் எஸ்.முஹம்மட் அலி ஜின்னா, பொத்துவில் நாடாளுமன்ற வேட்பாளரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான என்.எச்.முனாஸ், முன்னாள் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எம்.எம்.தாஜுதீன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முன்னாள்



பொத்துவில் இளைஞர் அமைப்பாளரும் சிரேஷ்ட உறுப்பினருமான ஹாலித் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




# மருதமுனையில் வர்த்தக நிலையம் உடைத்து திருட்டு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரதான வீதியில் உள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்களும் பணமும் திருடப்பட்டுள்ளன என்று பெரிய நீலாவணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வரு வதாவது, நேற்று முன்தினம் (26) நள்ளிரவு வேளையில் குறித்த வர்த்தக நிலையத்தின் முன்பக்கமாக உள்ள பூட்டுக்கள் உடைக்கப்பட்டு உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த பெறுமதி மிக்க பொருள்கள் மற்றும் அவசர தேவைக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் ஐந்து லட்சம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என்று வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனை அடுத்து அங்கு விரைந்த பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெ.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஷஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# புலிகள் பாதுகாத்த நிலங்களை வனஇலாகா அபகரித்துள்ளது!

## உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்கிறார் ரவிகரன் எம்.பி

**(விஜயரத்தினம் சரவணன்)**

கடந்த 2009 இற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் பாதுகாக்கப்பட்ட தமிழ் மக்களின் பெருமளவான விவசாய மற்றும், குடியிருப்பு நிலங்களைத் தற்போது வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளது என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.



இவ்வாறு வனவளத் திணைக்களத் தால் அடாவடித்தனமாக அபகரிக்கப் பட்டுள்ள காணிகள் உடனடியாக விடு விக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில், வவுனியா வடக்கு பிரதேச செயலர் பகுதிகளில் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிர மிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பில் பேசுபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத் துத் தெரிவிக்கையில்,

வன்னிப் பகுதி மக்கள் கடந்த காலங்களில் இடம் பெயர்வைச் சந்தித்து மீள்குடியமர்ந்தமை அனைவரும் அறிந்ததே. சில இடங்களில் குறிப்பட் டளவு காலங்களுக்குள்ளும், சில பகுதிகளில் நீண்ட காலங்களுக்குப் பின்னரும் மக்கள் மீளக்குடியமர்த்தப் பட்டனர்.

இந்த நிலையில் மக்கள் இடப்பெயர் வுக்கு முன்னர் பயிர்செய்கையில் ஈடுபட்ட காணிகள் தற்போது பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

தற்போது இவ்வாறு பற்றைக் காடுக ளாகக் காட்சியளிக்கும் எமது மக்களுக்கு உரிய காணிகளுக்கு, எவ்வித முன்றி விப்புக்களும் இன்றி வனவளத் திணைக் களத்தினர் தற்போது எல்லைக் கல்லி டும் அடாவடித்தனமான செயற்பாடு களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தந்த மாவட்டசெயலருக்கோ, பிரதேச செயலருக்கோ, கிராம அலுவ லருக்கோ, காணிகளுக்கு உரிய மக்களுக்கோ அறிவிக்காமலேயே இவ் வாறு எல்லைக் கல்லிடும் பணிகளில் வனவளத் திணைக்களத்தினர் ஈடுப டுகின்றனர்.

பூர்வீகமாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு திறம்பட வாழ்ந்துவந்த எமது மக்களின் பயிர்ச் செய்கை நிலங்களில் அதிகமானவை வனவளத் திணைக் களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

வனவளத் திணைக்களத்தின் அடா வடித்தனமான ஆக்கிரமிப்புத் தொடர் பில் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 இற்கு முன்னர் வனவளத் திணைக்களத் திடம் 2,22006 ஏக்கர், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடாவடித்தனமாக எமது மக்களின் காணிகளுக்கும் எல் லைக் கல்லிட்டு 4,35000 ஏக்கர் காணி கள் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது.

அந்த வகையில் 2009 ஆம் ஆண் டுக்கு முன்னர் எமது மக்களின் காணி களை விடுதலைப் புலிகள் பாதுகாத்த னர். அவ்வாறு எமது மக்களின் காணி களை விடுதலைப்புலிகள் பாதுகாத் ததால்தான் எமது மக்கள் நிறைவாகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று நாம் தொடர்ந்தும் வலியு றுத்திவருகின்றோம். புதிதாகப் பொறுப் பேற்றுள்ள அரசிடமும் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள எமது மக்களின் காணிவிடுவிப்புத் தொடர்பில் தொடர்ந் தும் வலியுறுத்துவோம்.

நாட்டுக்குக் காட்டுவளம் தேவைதான். அதற்காக நாட்டுக்கான ஒட்டுமொத்த காடையும் வன்னிக்குள் இருந்து உரு வாக்கவேண்டும் என்று நினைத்தால் அது முற்றிலும் தவறான நிலைப் பாடாகும்.

வன்னியில் மக்களிடம் இருந்த காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவ்வாறு விடுவித்தாலே எமது மக்களால் தமது வாழ்வாதாரத் தைக் கொண்டு செல்ல முடியும்.

வன்னி மக்கள் சிறந்த உழைப்பா ளர்கள். அவர்கள் உழைத்து வாழ்ந்த நிலங்களே இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட் டுள்ளன.

எனவே அபிவிருத்தி ஒருங்கிணைப் புக் குழுத் தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும் வனவளத் திணைக்களத்தின் இந்த அடாவடித்த னமான செயற்பாடுதொடர்பில் கவன மெடுக்கவேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர், வனவளத் திணைக்களத்தோடு தொடர்புடைய வர்களுடனும் நாம் இணைந்து பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டும். – என் றார்.



# யானை, குரங்குகளைக் கட்டுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு



**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கு நெடுங்கேணிநகர், சுற்று வட்டப் பாதை உள்ளிட்ட இடங்களில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. தற்போது தேங்காய் விலை அதிகரிப்புக்குக் குரங்குகளும் ஒரு காரணம்.

இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே காட்டுயானைகளையும், குரங்குகளையும் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நெடுங்கேணி நகரில் பிரதான சுற்றுவட்ட வீதியில் யானை நடந்து செல்கிறது என்று மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

நகரில், சந்திகளில் மக்கள் நடமாடுவதையே அவதானித்திருக்கின்றோம். ஆனால் இங்கு நகரையும், சந்திப் பகுதியையும் காட்டு யானைகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன.

இதனால் மிக மோசமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்றும் மக்களால் முறையிடப்பட்டுள்ளது.

வன்னியின் பலபகுதிகளிலும் இதேபோல் காட்டு யானைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் யானையை வேறு இடங்களில் இருந்து கொண்டுவந்து வன்னிப் பகுதிகளில் விடுவதாகவும் மக்கள் முறையிடுகின்றனர்.

எனவே காட்டு யானைகளைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதேபோல் குரங்குகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

காட்டு யானைகளாலும், குரங்குகளாலும் எமது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக தற்போது தேங்காயின் விலை அதிகரிப்பதற்கு குரங்கும் ஒரு காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

அத்தோடு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி எமது மக்கள் பலர் இறந்திருக்கின்றனர். ஆகவே யானைகளைக்கட்டுப்படுத்த கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். – என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் இந்தக் கருத்தை பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் வரவேற்றனர்.

இந்த நிலையில் இது தொடர்பில் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க பதிலளிக்கையில்,

யானை குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். யானைகளை வேறு இடங்களில் இருந்து கொண்டுவந்து இறக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றால் அவற்றைப் புகைப்படம் எடுத்து, எம்மிடம் ஆதாரமாகக் கையளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.






# சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா புனரமைப்பு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையால் புனரமைப்பு செய்யப்பட்டு வரும் சாய்ந்தமருது கடற்கரைப் பூங்காவுக்கு கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அங்கு முன்னெடுக்கப்படும் புனரமைப்புப் பணிகளை மீளாய்வு செய்த அவர், அவற்றின் தரம் குறித்துக் கூடிய அவதானம் செலுத்தினார்.

சம்மந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த நிறுவன முகாமையாளருடன் ஆலோசனைகளைப் பரிமாறிக் கொண்டார்.

சிறுவர்களின் விளையாட்டரங்காகவும் பெண்கள் உள்ளிட்ட பொது மக்களின் பொழுது போக்குமிடமாகவும் காணப்படும் இந்தப் பூங்காவின் அனைத்துக் கட்டுமானங்களும் சூழலும் மிகவும் பாதுகாப்பானவையாகவும் தரமானவையாகவும் அமையப் பெற வேண்டும் என்று ஆணையாளர் நௌபீஸ் இதன்போது அறிவுறுத்தினார்.

புனரமைப்பு வேலைத் திட்டத்தை இன்னும் துரிதமாக முன்னெடுத்து கூடிய விரைவில் முடிவுறுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம். நுஸைர் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.



# கல்முனை வைத்தியாசலைக்கு ஆதம்பாவா எம்.பி. விஜயம்!

(பாறுக் ஷிஹான், எஸ்.அஷ்ரப்கான்)

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியசாலையின் பல்வேறு தேவைகள் குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் சில பிரிவுகளுக்கான இயந்திரங்கள் பழுதடைந்தமை தொடர்பில் எழுந்த விமர்சனங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. துரித கதியில் அவற்றைத் திருத்தியமைக்க உரிய அதிகாரிகளுக்கு இதன்போது ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன் வைத்தியசாலையின் சுற்றுச்சூழலை, வைத்தியசாலையின் அத்தியட்சகர் ஏ.எல்.எம். நகுமானுடன் சென்று பார்வையிட்டார். அததுடன் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வைத்திய அத்தியட்சகர் வைத்தியசாலையில் செயற்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி திட்ட வரைபுகளுடனான முன்மொழிவைத் தெளிவுபடுத்தினார்

இதன்போது இந்த வைத்தியசாலையின் புதிய கட்டட நிர்மாணங்களை பார்வையிட்ட அவர் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குப் பல மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்து நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பார் என்று உறுதியளித்தார். இதே வேளை நாடாளுமன்ற உறுப்பினர் ரஹ்மத் சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் இரத்ததான முகாமையும் பார்வையிட்டார்.



# போதைப்பொருள் பாவனை தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸ் அத்தியட்சகர் பண்டார தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான், வி.ரி.சகாதேவராஜா)

போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு பொது மக்களின் உதவி கட்டாயம் தேவை. சமூகத்தில் எழும் குற்றச் செயல்களை தடுக்க பொலிஸார் பொது மக்கள் உறவு அவசியம். அதற்கு மக்கள் பாதுகாப்பு உபதேசக் குழுக்கள் வலுச்சேர்க்கும் என்பது எனது நம்பிக்கை.

இவ்வாறு அம்பாறை அக்கரைப்பற்று பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பி. பண்டார தெரிவித்தார்.

காரைதீவு பொலிஸ் பிரிவிற்கான மக்கள் பாதுகாப்பு உபதேசக்குழு கூட்டம் வியாழக்கிழமை (26) மாலை காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.ஜகத் தலைமையில் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் பாதுகாப்பு உபதேச குழுக்களின் மூலம் பொலிஸார் பொது மக்கள் நல்லுறுவு வலுப்பெறும். சமூகத்தில் அவ்வப்போது எழும் குற்றச்செயல்களைத் தடுக்கப் பொலிஸார் பொது மக்கள் நல்லுறுவு அவசியம். அதற்கு இவ்வாறான உபதேசக்குழுக்கள் மேலும் வலுச்சேர்க்கும் என்பது எனது நம்பிக்கை.

மக்கள் சுதந்திரமாக நிம்மதியாக பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதற்காகப் பொலிஸார் கடமையாற்றி வருகின்றனர். எனினும் பொதுமக்களின் ஒத்துழைப்பில்லாமல் அது 100 வீதம் சாத்தியமாகாது. எனவே பொது மக்கள் பொலிஸார் உறவு முக்கியமானது.அத்துடன் உபதேச குழுவின் வகிபாகம் பாரியது. அதன் அதிகாரம் வரையறையற்றது.

நான் திருக்கோவிலில் இருந்தபோது அங்குள்ள மக்கள் பாதுகாப்பு உபதேச குழுவே என்னைக் காப்பாற்றியது.

சட்ட விரோத செயற்பாடுகளையும் போதைப் பொருள் கடத்தலையும் இப்பிரதேசத்தில் முற்றாக தடை செய்யவேண்டும். தங்கள் உயிர்ப் பாதுகாப்பில் பொலி ஸாருக்கும் பங்குண்டு என்ற கடமை உணர்வுடன் எமது கடமையைச் செய்கி றோம். இதற்குப் பொது மக்கள் ஒத்துழைப்ப வழங்க முன்வர வேண்டும். பொது மக்களின் ஒத்துழைப்பை பெரிதும் எதிர்பார்க்கிறோம்.- என்றார்.



# ஞானச்சுடர ஆன்மீக மலர் வெளியீடும் உதவி வழங்கலும்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தம் வெளியீடு செய்யப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் 324 மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் சிவநாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் இடம்பெற்றது.

பஞ்ச புராண ஓதுதலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் சோ. பரமநாதன் நிகழ்த்தினார். தொடர்ந்து மதிப்பீட்டுரையை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆறு.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆற்றினார்கள். அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் கல்லுண்டாய் புதியகுடியிருப்பை சேர்ந்த, கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் தரம் - 8 இல் கல்வி கற்கும் மாணவன், மத்திய கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவன், சென். றோக்கா வித்தியாலயம் தரம் - 8 இல் கல்வி கற்கும் மாணவன் ஆகியோருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.





இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிர சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், அடியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சவூதி அரேபியாவின் இமாம் காத்தான்குடிக்கு!

(மட்டு.துஷாரா, அபு அலா )

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் அழைப்பின் பேரில் சவூதி அரேபியாவில் புகழ்பெற்ற முக்கியமான இமாம்களில் ஒருவரான அஷ்ஷேய்க் காரி முகம்மது சஆத் நுமானி காத்தான்குடிக்கு (27) வருகை தந்தார்.

காத்தான்குடி அல்–அக்ஸா பெரியபள்ளிவாசலில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் ஜும்ஆ பேருரையுடன் தொழுகையையும் நடத்தியதுடன் பல குரல்களில் அல்–குர்ஆனையும் ஓதிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து மஹ்ரிப் தொழுகையினை ஏறாவூர் பெரிய மீரா ஜும்ஆ பள்ளிவாசலிலும், இஷா தொழுகையை வாழைச்சேனை முகைத்தீன் ஜும்ஆ பள்ளிவாசலிலும் நடத்தி வைத்தார்.

அஷ்ஷேய்க் முகம்மது சஆத் நுமானி சவூதி அரேபியா மக்கா ஹரம் ஷரீபின் தலைமை இமாமான அஷ்ஷேய்க் சுதைஷ் அவர்களின் குரல் உட்பட பல்வேறுபட்ட இமாம்களின் குரல்களில் புனித அல்குர்ஆன் வசனங்களை ஓதக்கூடிய சிறந்த “காரியாக” திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.









# விஜயகாந்த் முதலாம் ஆண்டு நினைவு நாள்: கோயம்பேட்டில் தே.மு.தி.கவினர் பேரணி

தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்தின் முதலாமாண்டு நினைவு நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை ஒட்டி சென்னை கோயம்பேட்டில் அவரது நினைவிடம் அமைந்துள்ள பகுதியில் தே.மு.தி.கவினர் தடையை மீறி பேரணியில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டதோடு பரபரப்பான சூழல் நிலவியது.

கடந்த ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதி தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் காலமானார். அவரது உடலுக்கு லட்சக்கணக்கானோர் திரண்டு அஞ்சலி செலுத்திய நிலையில், இறுதிச் சடங்கில் அரசு மரியாதையும் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து சென்னையில் கட்சித் தலைமையகத்தில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டு, அங்கு நாள்தோறும் பூஜையும், அன்னதானமும் செய்யப்படுகிறது.

இந்நிலையில், விஜயகாந்தின் முதலாமாண்டு நினைவு நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இதற்கான குருபூஜையில் பங்கேற்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி முதல் த.வெ.க. தலைவர் விஜய் வரையிலான அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் தே.மு.தி.க. தலைமை நிர்வாகிகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

மேலும் மாநில தேர்தல் ஆணையத்தில் இருந்து விஜயகாந்த் நினைவிடம் வரை பேரணி நடத்தவும் அனுமதி கோரியிருந்தனர். ஆனால், கடைசி நேரத்தில் விஜயகாந்த் நினைவுநாள் பேரணிக்கு திடீரென அனுமதி மறுக்கப் பட்டதாகத் தெரிகிறது. வேண்டுமென்றே பேரணிக்கு தடை விதிக்கப்பட்டதாக தே.மு.தி.கவினர் குற்றஞ்சாட்டினர்.

இருப்பினும் விஜயகாந்த் நினைவிடத்தில் கட்சியின் பொதுச் செயலாளரும் விஜயகாந்தின் மனைவியுமான பிரேமலதா விஜயகாந்த், மகன்கள் சண்முகபாண்டியன், விஜய பிரபாகரன், மைத்துனர் சுதீஷ் உள்ளிட்டோர் தலைமையில் தே.மு.திகவினர் தடையை மீறி பேரணியில் ஈடுபட்டனர். இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கான தே.மு.தி.க. தொண்டர்கள் கலந்து கொண்டனர்.





# மன்மோகன் சிங்கின் உடல் சீக்கிய முறைப்படி தகனம்

## குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் இறுதி மரியாதை

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் உடல் டில்லி நிகம்போத் காட் பகுதியில் சீக்கிய முறைப்படி தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, இன்று காலை மன்மோகன் சிங்கின் உடல் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் டில்லியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து காங்கிரஸ் தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, ப.சிதம்பரம், கே.சி. வேணுகோபால், ஜெயராம் ரமேஷ், சசி தரூர், பவன் கெரா உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் மன்மோகன் சிங்கின் உடலுக்கு மலர் வளையம் வைத்தும் மலர்களை தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

மன்மோகன் சிங்கின் மனைவி குர்ஷரன் கவுரும், காங்கிரஸ் தலைமையகத்துக்கு வந்து கணவரின் உடலுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து மன்மோகன் சிங்கின் உடல் அங்கிருந்து டில்லி யமுனை நதிக்கரையில் உள்ள நிகம்போத் காட் எரியூட்டுத் தலத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு சோனியா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

குடியரசு தலைவர் உள்ளிட்டோர்



இறுதி அஞ்சலி: நிகம்போத் காட் பகுதிக்கு வருகை தந்து குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தலைவரும் மத்திய அமைச்சருமான ஜெ.பி. நட்டா, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக், டெல்லி துணைநிலை ஆளுநர் வி.கே.சக்சேனா, முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுஹான் உள்ளிட்டோர் மன்மோகன் சிங்கின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

தலைவர்களின் இறுதி மரியாதையை அடுத்து மன்மோகன் சிங்கின் உடல் மீது போர்த்தப்பட்டிருந்த தேசியக் கொடி அகற்றப்பட்டு, உடல் தகன மேடைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு, சந்தனக் கட்டைகள் மீது மன்மோகன் சிங்கின் உடல் வைக்கப்பட்டு, சீக்கிய மத முறைப்படி மந்திரங்கள் ஓதப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன.

இதில், மன்மோகன் சிங்கின் மனைவி குர்ஷரன் கவுர், மகள்கள், நெருங்கிய உறவினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சடங்குகளைச் செய்தனர். பின்னர் மன்மோகன் சிங் உடலைச் சுற்றி கட்டைகள் வைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக பகல் 1 மணி அளவில் முழு இராணுவ மரியாதை அளிக்கப்பட்டு, மன்மோகன் சிங்கின் உடல் எரியூட்டப்பட்டது.

முன்னதாக, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் இறுதிச் சடங்குகள் நடைபெறும் இடத்தில் அவருக்கு நினைவிடம் அமைக்கும் வண்ணம் இடம் ஒதுக்குமாறு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வேண்டுகோள் விடுத்தார். அவ்வாறு இடம் ஒதுக்குவது, எளிய பின்னணியில் இருந்து உயர்ந்த ஒரு தலைவருக்கு செலுத்தும் மரியாதையாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இதையடுத்து, மத்திய அமைச்சரவை கூட்டம் கூட்டப்பட்டு, அதன் முடிவுகள் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு தெரிவிக்கப்பட்டது. முன்னாள் பிரதமர்களுக்கு நினைவிடம் அமைப்பது தொடர்பாக அறக்கட்டளை உருவாக்கப்பட்டு அதன் முடிவுகளின்படி மன்மோகன் சிங்குக்கு நினைவிடம் கட்ட அரசு இடம் ஒதுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.





# பதில் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படும்: ஹூதி கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை





யேமனில் இஸ்ரேலிய தரப்பினரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ள போதிலும் தங்களது பதில் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படும் என ஹூதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் இடம்பெற்ற இனப்படு கொலைக்குப் பதிலளிக்கும் வகையில் தங்களது தரப்பிலிருந்து தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்படும் எனஹூதி கிளர்ச்சியாளர்கள் கிளர்ச்சி படையின் அரசியல் தலைவரான மொஹமட் அல்–புகைதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இஸ்ரேல் மீதான தங்க ளது இராணுவ இலக்குகளை அதிக ரிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

முன்னதாக யேமனின் தலைநகரான சனா மீது இஸ்ரேலிய போர் விமானங் கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

அங்குள்ள விமான நிலையம், துறைமுகங்கள் மற்றும் மின்னுற்பத்தி நிலையங்கள் என்பவற்றை இலக்கு வைத்து இஸ்ரேல் இவ்வாறு தாக்குதல் களை நடத்தியுள்ளது.

இதன்போது நான்கு பேர் கொல் லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஈரான் ஆதரவு குழுவான ஹூதி கிளர்ச்சியாளர் கள் தரப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அதேநேரம், இந்த விடயம் தொடர் பில் தாம் கவலையடைவதாகத் தெரி வித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ், விமான நிலையம் மற்றும் துறைமுகங்கள் போன்றவற்றின் மீதான தாக்குதல்கள் காரணமாக மனி தாபிமான உதவிகளை வழங்குவதில் சிக்கல் ஏற்படும் என குறிப்பிட்டுள் ளார்.

# ஜேர்மன் நாடாளுமன்றத்தை கலைத்தார் ஜனாதிபதி பிராங்



ஜேர்மன் நாடாளுமன்றத்தை, அந்த நாட்டு ஜனாதிபதி பிராங் – வால்டர் ஸ்ரீன்மியர் கலைத்துள்ளார்.

சான்சலர் ஒலாப் ஸ்கோல்சாஸ்சின் அரசாங்கம் வீழ்ச்சியடைந்த நிலையில், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் சமூக ஜனநாயக கட்சியை சேர்ந்த ஷே ால்ஸ்சை தொடர்ந்து சுதந்திர ஜனநாயக கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் வெளியேறியதன் பின்னர் நாடாளுமன்றம் பெரும்பான்மையினை இழந்தது.

அதற்கமைய இந்த மாத ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆளும் கட்சியினர் தோல்வியடைந்தனர்.

ஜேர்மனியின் பாதுகாப்பு மற்றும் குடியேற்றம் குறித்த சர்ச்சைக்குரிய வகையில் விவாதம் கடந்த வாரம் ஆரம்பமான நிலையிலும், கடந்த வாரம் கிறிஸ்மஸ் சந்தையில் ஏற்பட்ட மகிழுந்து விபத்து போன்ற விடயங்களால் அங்கு ஸ்திர தன்மையற்ற நிலை உருவாகியுள்ளது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

சனிக்கிழமை 28/12/2024

## விமான விபத்து தொடர்பில் விசாரணை கோரும் கனடா

அஸர்பய்ஜான் விமான விபத்து குறித்து வெளிப்படை தன்மையுடன் கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என கனடிய அரசாங்கம் ரஷ்யாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.02▶



# கனடாவில் பொருள்களுக்கு விலை கழிவுகள்; கொள்வனவில் ஆர்வம் காட்டும் பொதுமக்கள்

**கனடாவில் நத்தார் பண்டிகையை அடுத்த நாள் பல்வேறு விலை கழிவுகள் அறிவிக்கப்பட்டு பொருள்கள் விற்பனை செய்யப்படுவது வழமையானதாகும்.**

**பாக்சிங் தினத்தில் இவ்வாறு விலை கழிவுகள் அறிவிக்கப்படுகின்றன. அந்த வகையில் ஏற்கனவே அரசாங்கம் அறிவித்துள்ள பொருள்கள் சேவைகள் வரி விடுமுறை மக்களுக்கு பொருள் கொள்வனவின்போது பெரும் உதவியாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.**

வாழ்க்கைச் செலவு தொடர்பிலான பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் மக்கள் இந்த வரிச் சலுகைகளை பயன்படுத்தி பொருள் கொள்வனவில் ஈடுபட ஆர்வம் காட்டுகின்றனர்.

பல்வேறு பொருள்களுக்கு அரசாங்கம் இவ்வாறு வரி விடுமுறை அறிவித்துள்ளது.

சிறுவர்களின் விளையாட்டு பொருள்கள் உணவு பண்டங்கள், வைன் வகைகள், உணவக உணவுப் பொருள்கள் என பெரும் எண்ணிக் கையிலான பொருள்களுக்கு மத்திய அரசாங்கம் வரி விடுமுறை வழங்கியுள்ளது.

இந்த நிலையில் பாக்ஸின் தினத்தில் விலை கழிவுகளுடன் பொருள்கள் விற்பனை செய்யப்படும் நிலையில் வரி விடுமுறையையும் பயன்படுத்தி மக்கள் அதிக அளவில் பொருள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# விபத்தில் பாதசாரி உயிரிழப்பு; பொலிஸார் தீவிர விசாரணை

கனடாவில் பாதசாரி ஒருவர் உயிரிழந்த விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மார்க்கம் பகுதியில் சாரதி ஒருவர் பாதுசாரி ஒருவரை மோதி விபத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் 53 வயதான பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி மார்க்கம் மற்றும் கோல்டன் வீதிகளுக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயம் அடைந்த மேற்படி நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன எனவும் தீவிர விசாரணை இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# ஃப்ளோரிடாவில் இடம்பெற்ற படகு விபத்தில் கனடியர் பலி

அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் இடம்பெற்ற படகு விபத்தில் கனடிய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கனடாவின் மொன்றியல் பகுதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விபத்தில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

திடீரென படகு தீப்பற்றி வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

படகில் ஏழு பயணிகள் பயணித்துள்ளனர் படகின் எஞ்சினை செயற்படுத்திய போது திடீரென அது வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மொன்றியலைச் சேர்ந்த செபஸ்டியன் கோத்தாயிர் என்ற 41 வயதான நபர் இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த படகில் பயணித்த ஏனைய ஆறு பயணிகளும் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த படகு விபத்திற்கான காரணங்கள் குறித்து கண்டறியும் நோக்கில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.








## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


ரஷ்யாவின் வான் பாதுகாப்பு கட்டமைப்பின் ஊடாக தாக்குதல் நடத்தி இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அஸர்பய்ஜான் விமானத்தின் மீது ரஷ்ய வான் படையினர் தாக்குதல் நடத்தி இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த சம்பவம் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என கனடிய வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளது.

அஸர்பய்ஜான் விமான சேவை நிறுவனத்திற:கு சொந்தமான விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 38 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த விபத்து கசகஸ்தானில் இடம் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# விடுமுறையில் சவால்களை எதிர்நோக்கும் அகதிகள்

கனடாவில் விடுமுறை காலம் அகதிகளுக்கு சவால் மிக்கது என டொரன்டோவின் தற்காலிக இருப்பிட பராமரிப்பு பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரொறன்ரோவில் வீடற்றவர்களின் பிரச்சினை மிக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பண்டிகை மற்றும் விடுமுறை காலத்தில் வீடற்றவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடுவதாகவும் கடும் குளிருடனான காலநிலை அவர்களை மேலும் துன்புறுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தங்குமிட வசதிகள் இல்லாத அகதிகள் தங்கள் தனிமைப்படுத்தப்பட்டதை உணர்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நத்தார் பண்டிகை காலத்தில் வீடுகளை விட்டு வெளியேறி வாழ்வது சிரமமானது என தற்காலிக தங்குமிட பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அகதிகள் தொடர்பான தன்னார்வ தொண்டர்களும் வீடற்றவர் எதிர்நோக்கும் சிரமங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டி உள்ளனர்.




# கனடாவில் ஏற்படக்கூடிய நோய்கள் குறித்து அறிவுறுத்தல்

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் கனடாவில் ஏற்படக்கூடிய நோய்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவதாக கனடிய பிரதம பொதுச் சுகாதார அதிகாரி டாக்டர் திரேசா டேம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பறவை காய்ச்சல் மற்றும் தட்டம்மை போன்ற நோய்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக கனடாவில் தட்டம்மை நோய் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறு எனினும் அண்மைக்காலமாக தட்டம்மை நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர்.

இதே போன்று கனடாவில் பறவை காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டில் ஒரு பறவை காய்ச்சல் நோயாளி பதிவாகியிருந்தார்.

எனவே இந்த இரண்டு நோய்கள் தொடர்பிலும் மக்கள் போதிய அளவு அவதானத்துடன் இருக்க வேண்டும் என டாக்டர் டேம் தெரிவித்துள்ளார்.

